உ

சிவமயம்

# பருளை போசல்



— அருணாசலப் புலவர்

# பருளை யேசல்



— அருணாசலப்புலவர் —

# பதிப்புரை

சிறந்த தமிழ்ப் புலவர்கள் தங்கள் பக்திமேலீட்டால் எம்பெருமானைப் பலவகைப்பட்ட திருக்கோலங்களிலும் கண்டு பாடிப்பரவி இன்புற்றிருக்கிறார்கள். பாடியவையும் "தூதொடு நான்மணிமாலை 'பிரபந்தக் கோவையுலா மடல்" எனப்பலவகைப் பிரபந்தங்களாயின. அவற்றுள் "ஏசல்" என்பதும் ஒரு வகைச் சிறப்புடையதாகும். இதில் முருகப்பெருமான் வள்ளி நாயகியாரைத் திருமணஞ் செய்த பின்னர் தெய்வநாயகியாரிடம் வருவதாக ஒரு சந்தர்ப்பமும் அப்போது இருவரும் சம்பாஷித்துக்கொண்டதாக ஒரு இனிய காட்சியும் காட்டப்பெற்றிருக்கிறது. இச்சந்தர்ப்பத்தில் வேலேந்திய விமலனது சிறப்புகள் மிக இனிமையாகவும் சாதுர்யமாகவும் கூறப்படுதல் புலவரவர்களின் பக்தியையும் திறமையையும் நன்கு எடுத்துக்காட்டுகிறது. இந்நூல் முன் இருமுறை அச்சிடப்பெற்றிருக்கிறது. இரண்டாவது முறையில் புலவர்வரலாறு பாடிச்சேர்க்கப்பெற்றது. பாடியவர் சுழிபுரம் ஐக்கியசங்க சைவ வித்தியாசாலையில் தலைமைஆசிரியராயிருந்த ஸ்ரீமாந், வ கதிர்காமு அவர்கள். இரண்டாம் முறையச்சிட்ட பிரதிகள் கிடையாமற் போகவே மறுபடியும் அச்சிடநேரிட்டது. புலவரவர்கள் சகோதரர் தில்லையம்பலம் என்பவருக்கு இரு புதல்வர்கள். பரமநாதர் என்பவர் விக்ரோறியாக் கல்லூரியில் ஆசிரியராயிருந்தவர். இவர் முருகப்பெருமானுக்கு பாற் காவடித்திருத்தொண்டை ஆரம்பித்து வைத்தவர். சபாபதிப்பிள்ளை என்பவர் அதைத்

தொடர்ந்து நடாத்தி வருபவர். இவரது மூத்தமகனும் மலாயாவில் அரசசேவை செய்து இளைப்பாறியிருப்பவருமான ஸ்ரீ மாந் ச. வைத்தியலிங்கம் அவர்கள் இப்பொழுது இதை அச்சிடுவிக்க விரும்பினார்கள். அவ் விருப்பமே அழகிய நூலாக வெளிவருகிறது. எழுத்துப்பிழைகள் நீக்கப்பெற்று அழகிய உருவில் இது வருவது நண்பர் 'வரதர்' அவர்களது தனிச்சிறப்பினலாகும். இப்பணியில் எனக்குக்கிடைத்த பங்கு ஸ்ரீ மாந் வைத்தியலிங்கம் அவாகள் எனது தந்தையாரிடம் கொண்டுள்ள குருபக்திக்காணிக்கையாகும்.

**இவர்கள் பரம்பரை பல்லாண்டு வாழ்க.**

இங்ஙனம்,
சு. ஷண்முகரத்ந சர்மா

முருகமூர்த்திகோயில்
பருளை, சுழிபுரம்.
25—5—59

சிவமயம்

# இந்நூலாக்கியோன்

இலங்கையிலுள்ள யாழ்ப்பாணத்திற்
றுலங்கியகாரைத் துகளிலாநகரிற்
றண்டலைமருங்கின் வண்டுபாணியற்றக்
குண்டுநீர்வாவியின் முண்டகமலரும்
களபூமிதன்னிற் காரோம்பியநல்

லுழவர்தங்குடியின் வழமைசான்ற
விருமரபானு முலகினிலோங்கி
மருவியமாறு முதலியார்தமது
மரபுவழிவந்து மாண்புடையோனு
யரவநெடுமொழி சூழவனிமீது

கேண்மையும்வண்மையுங் கிளர்ந்த நுண்மையும்
ஆண்மையும் பூண்ட வையம்பெருமாள்
செய்தவம்பலவுந் திரண்டுருவெடுத்தென்
எய்தியதில்லை நாதரென் றுரைக்கும்
நற்பெயர் சூடிய நந்தாமணியாய்

காரைகளநகர் கவினெடும்நீங்கியே
பேர்கொளுஞ்சுழிபுரப் பெண்ணினை மணந்தே
இல்லறத்தொழுகி யிதம்படநடந்தே
நல்லறப்பரம நாதனைத் துதிகொளுந்
தன்மகனைத் தந்ததன் பின்னர்

நன்மனப்பரம நாதன்றவத்தால்
கல்விமேம்பாடு கனத்தவிதரணஞ்
செல்வந்தெருட்சி சிறந்தவனப்போ
டன்புரைசத்திய மரியவீடுறு
மன்பெருமாசை மாறுமனனுடை

அருணசலமெனு மன்புடைத்தோன்றல்
வருணமார்பானு வெனவந்துதித்து
நலந்தருகுமார சுவாமிக்குருக்கள்
வலந்தருசபாபதிக் குருக்களாதியாம்
நல்லாசிரியர் தங்களையடைந்து

சொல்லருங்கல்வியில் வல்லனய்க்கற்று
கீர்த்திமேம்பாடு கிளர்ந்துவருகையில்
பூத்திகள் விளாங்குளப் பொருவினன்னகரா
ளதிகாரமழைத் தன்புசெய்தாங்கே
நிதிபலவளித்து நீரிங்கிருந்துநம்

அன்புடை மைந்தர்க் கரியகல்விகளை
இன்புறப்பயிற் றுவீரெனவிருந்தைந்
தாண்டதுவரையு மரியகல்விகளுள்
வேண்டுவவெல்லாம் வேறுவேறாக
மாணவர்மனங்கொள மாண்புடனூட்டிய

பேணுபுகழான் பெருந்தகைபின்னர்
முந்துபுகழ்சேர் முதியசுழியை
வந்துமறையவ ராதிமக்களை
வித்தைகற்பித்து விளங்குமறிவிற்
சித்திபெற்றோங்கச் செய்தபுலவன்

சீர்த்தசுழிபுரஞ் சேர்பண்ணைகத்
தேர்த்திகழ்வித்தியா சாலையொன்றமைத்
தரசினருதவியு மதற்களிப்பித்து
விரவியபுகழுடை வித்துவான் சபாபதி
நாவலர்மேனாட் டோவிலாப்புகழுடைப்

பாவலனருணா சலமெனப்பரவிய
வள்ளல்பாலோ வாழ்கணபதிமேல்
தெள்ளியவூஞ்சல் சிறக்கப்பாடிமுன்
பிள்ளைத்தமிழொடு பீடுகெடுக்கும்
கள்ளுப்பாட்டொடு பள்ளும்பாடி

அந்நகர்மேவு மறுமுகன்மேலே
கொன்னுடையூஞ்ச லேசல்பராக்கு
எச்சரிக்கையொடு லாலிமங்களம்
முச்சகம்புகழ முடித்துச்சூட்டியும்
நீரூர்சடைமுடி நின்மலன்றோழமை

மாரூரன் புகழானசரிதையை
பல்படவிரித்துப் பன்னுகீர்த்தனையாய்ச்
சொல்வளம் பெருகச் சொல்லியன்ன
ஊஞ்சலாதி யுறுபாடல்களைத்
தாஞ்செய்நலனுடைத் தக்கவறிஞன்

மனையறம்புரிந்து மங்கையிருவரைத்
தனையனொருவனொடு தந்துமிவ்வுலக
வாழ்வதுபொய்யென் றாள்வலியாலே
தாழ்வெனுந்தன்மையு நீள்சடைமுடியும்
பூதியுங்காவியும் புனிதகண்டிகையு

மாதியாஞ்சின்னங்க ளடையப்பரித்துக்
காசியாத்திரைபோய்க் கங்கையாடி
மாசிலாச்செந்தி நாதரொடுமரீஇ
நெஞ்சகத்துள்ள நேர்மைகளோதி
நஞ்சணிகண்ட னற்பதந்தேடிப்
பரஞானியாகிப் பாசமறுத்த
விரவியவருண சலப்புலவோனே

சிவமயம்

# பருளை யேசல்

திருவளர் சுழிபுரத் தருவளர் பருளைவாழ்
செவ்வேளேசலிசைபாடத்—திருக்
கைவேலரேசல் கொண்டாட

மருவளர் கடதட வாரணமாமுக
வரதனடி துணையாமே—மன
விரதமொடு தொழுவோமே.

புல்லாலும் பூவாலும் பூசைகொள்வேலரென்
புன்கவிக்கன்பு கொள்வாரே—பல
துன்பமுந் துடைத்துக் காப்பாரே

கல்லாப்புல்லறிவேன் சொல்லும்பிழையைக்
கவிப்புலவீர் பொறுத்தாளும்—யார்க்குஞ்
செவிக்கிதமாமிதைக்கேளும்.

தெள்ளியவேலவர் வள்ளியைமருவிய
செய்தியறிந்தாள் தெய்வயானை—எங்க
ளையன் வரவறிந்தாள்மானே.

தன்னருங்கோபந்தன் னுள்ளத்திற்கொள்ளவே
சாத்திக்கதவு தாழ்ப்பூட்டினுள் — உடலம்
வேர்த்துக்கதவுதாழ்மாட்டினுள்.

தெய்வ யானையின் கதவு தாழ்பூட்டிய
திறமறிந்தார்குமரேச — ரந்த
விதமறிந்தார் முருகேசர்.

வையமுய்யத்திரு விளையாடலைச்செய்ய
வடிவேலர் தமதுளத்தெண்ணினுர் — திருக்
கைவேலர் யோசனைபண்ணினுர்

சாமத்திலையன்வள்ளி கோயில்விட்டுத்தெய்வத்
தையல் கோயில் வாயில்மேவினுர் — மித
மையல்கொண்டொய்யெனத்தாவினுர்

தாமக்கடம்பணி வேலவர் கதவினிற்
தட்டினுரெப்போதும்போலவே — கையால்
முட்டினுரப்போதுசாலவே.

தட்டியசத்தங் கேட்டுங்கேளாதது போலத்
தானிருந்தாடெய்வமாது — மட
மானிருந்தாளேயப்போது.

நெட்டிலைவடிவேல வர்திருவாயினுல்
நேரிழைக்கொரு மொழி கூறுவார் — தெய்வ
மகளிருக்கொருமொழி ஓதுவார்

பருளைவாழ் திருக்கந்தர் நானடிமானே
பதருமற்க தவைத்திறவடிதேனே — மனம்
விகருமற் திறவடிமானே

பொருளேவள்ளி சற்றுமவளைவிட்டேனிராப்
போதில்வந்திரங்கே போம்போம் — விடிய
நேரமிருக்குது போம்போம்.

போம்போம் போமென்று வீம்புகள் பேசுருய்
புத்திகேடென்னடிமாதே — கர்வம்
மெத்தப்பேசாதேயிப்போதே

தேம்பாதையும் வள்ளி வீட்டிற்குப்போம்பாதை
தெரியாமலிங்குவந்திரோ — வழி
அறியாதெங்குந்திரிந்திரோ

விம்மியெழும்மிணை முலையாய் நானுன்னை
விரும்பியணையவந்தேண்டி — பெண்ணே
விரகம்மிகவுங்கொண்டேண்டி.

சும்மாநின்றேன் வீண் வார்த்தைகள்பேசுறீர்
சுறுக்காய்ப்போய் வள்ளியைப்பாரும்—மன
விருப்பங்கொண்டவளை நீர் சேரும்.

மானேதேனே மயிலேகுயிலே
மனமிரங்கிக்கிட்டவாடி—நல்ல
மலர்மெத்தைமேல் முத்தந்தாடி.

ஏனோநீரெத்து வார்த்தைகள்பேசுறீர்
இதுவெல்லாம் நானறிவேனே—உம்முடை
சதியெல்லாமிப்படித்தானே.

அப்படியல்லடி மானேயினியுன்னை
அரைக்கணம்விட்டுப்பிரியேனே—மனதைக்
கரைக்கிறுயென்ன செய்வேனே.

செப்படிவித்தை போல் மருட்டுகிறீர்மனந்
திருட்டறியேனோநான்றனே—யும்முடை
வெருட்டினைக் குறியேனோநானே.

அறிவேனென்ருெரு விதமாகப்பேசுருய்
ஆங்காரமேதடி மாதே—என்னல்
தாங்காதே விரகமிப்போதே

தாங்காவிரகமுண்டானு லேனின்று
தாமதப்படுகிறீர்போம்போம்—இங்கே
ஆமென்றென்னுதேயும் போம்போம்

ஆங்காரியமில்லைப்போம்போமென்றென்னை
அதட்டினுலுனை விடுவேனே—வுந்த
னுதட்டமிர்தஞ்சுகியேனே.

கட்டி முத்தமிட வருவீரென்றவள்
காத்திருப்பாளங்கேபோம்போம்—வழி
பார்த்திருப்பாளங்கே போம்போம்.

கெட்டிக்காரியென்று தட்டிப்பேசுருயென்ன
கெடுகாலந்தானேடி மானே—நித்திரைத்
தடுமாற்றந்தானேடி தேனே.

தடுமாற்றம்பிடித்துங்கள் தகப்பனுர் தலைமேலோர்
தையலைச்சுமந்திருந்தாரே—இந்த
வையமெல்லாம் பெரும்பேரே.

வடுவாச்சு தொருயோனிக் காசைப்பட்டாயிரம்
வாங்கினுனுன் பிதாமாதே—அதை
மறந்துவிட்டாயே யிப்போதே.

ஓரிடத்தினிற்பிறந் தோரிடத்தினில்வளர்ந்
தோராறு தாய்முலை யுண்டீர்—கைக
ளீராறதாகவே கொண்டீர்

கார்நிறமான்மக ளாய்ப்பிறந் திந்திரன்
கயத்தின்பாலே வளர்ந்தாயே—பெண்ணே
குயத்தின்பால் நீயிழுந்தாயே

வலைப்பெண்ணுடலையுந் திரைப்பெண்டலையையும்
வலித்திழுக் கிறதறியீரோ—அப்பர்
சரித்திரத்தைக் குறியீரோ

இரைக்கிருயேன்மத யானைதன் மகளென்ப
தெனக்குத் தெரியுமடி மானே—உந்தன்
சினப்பறி வேனடி நானே.

யானை வயிற்றுதித் தேனோ நான்மத
யானையுடன் பிறந்ததும் நீரே—அதைத்
தானோ எனக்குரைத்தீரே

தேனையொத்தமொழி மானே கதவைத்
திறந்துணைந் தொருமுத்தந் தாடி—யெந்தன்
சீவனைக் காரடி வாடி

சொல்லச் சொல்லத்தில்லு மல்லுப் போராடுறீர்
தோஷக் கிறுகிறுப்பாச்சே—பித்த
காசந் தலைக்கேறிப் போய்ச்சோ

கல்லுங்கசியுமுன் மனங்கசியாதென்ன
காரணஞ் சொல்லடி மானே—உன்னைச்
சேரவந்தேனடி நானே

அந்தனைப் பித்தனென் றுருஞ்சொல்வாரும்மை
அதுதான் பிடித்துக்கொண்டாட்டுதோ—உமக்
கடிக்கடி மனமையல் கூட்டுதோ

முத்தவெண்ணகையே பித்தமல் லடியுன்மேல்
மோகப்பித்தமிது தாண்டி—விரக
தாபத்தைத் தணித்தருளேண்டி

ஆயிழை காளிமுன் றிருவாணமாய்க் குறித்
தலைத்தாடினா் சிவன் பண்டே—யுங்கள்
குலத்தினுக் கவமான முண்டே.

ஆயிர மனந்தம் வசைசொல்லி வைியினும்
அதிக சந்தோஷமு மேலே—பெண்ணே
யணைந்திடுவா யொருக்காலே

பறக்குந் தினைக்குக் காவலிருக்குங் குறப்பெண்தனை
பரிவா யணைந் திதம்பாரும்—சற்றும்
பிரிவில்லாமற் கூடிச் சேரும்

இரக்கமே பெண்களுக் கழகா முன்மன
மிரும்போ கருங்கல்லோ மானே—காட்டில்
பெரும்பேய் தானோடி தேனே

காட்டிற் குறத்தியை வீட்டிற் பெண்டாட்டியாய்க்
கைப்பிடித் தணைந்திரே சாமி—அதை
இப்பவுஞ் சொல்லுமே பூமி

கூட்டும் போகசக்தி அவளறிவாயே
குறைவில் கிரியாசக்தி நீயே—அந்த
முறையிலுற்றோமே யன்பாயே

பூவில் நாரிற்பெரும் பாவஞ்செய் வேடர்மாதைப்
போகசக்தி யெனச் சொன்னீரே—அந்த
மோகந்தீரப் போய்ப் புல்லுவீரே

ஆவியே தேவியே யமுதே பாகேயென்
ஆசையைத் தீர்த்தணைவாயே—எனக்
காருயிர்த் துணையடி நீயே

காவி மலர்விழி வள்ளியைச் சேர்ந்தின்பக்
காம வேதம் படித்தீரே — யவள்
மாமலர்ப் பதம் பிடித்தீரே

பணிவிடை நீயென்ன பார்த்துச் சொன்னாலும் நான்
பயபக்தியாய்ப் புரிவேனே — எந்தன்
புயவெற்பி லணைந்தருள் மானே

தணிவிலா மையலைத் தணிப்பாள் வள்ளியவள்
தனக்குப் போய்ப் பணிவிடைசெய்யும் — இப்போ
தெனக்குச் செய்வதை யங்கே வையும்

பதைக்குதே யாவி நீ வதைக்காதே பாவி யான்
பழிபாவந் தேடிக்கொள்ளாதே — வீண்
மொழிவரும் வெறுத்துத் தள்ளாதே

இதைப் புனக் கொச்சைக் குறத்திக்கு மிச்சையை
இசைத்தவளைக் கிட்டிச் சேரும் — மெத்தை
மிசைத்தவள் தரக் கட்டி மோரும்

குரும்பைபோ லரும்பிக் குடம்போல் வருமுலைக்
கோதையே கும்பிடுறேண்டி — விரக
வாதையைத் தீரெனை வேண்டி

வரும்பாதையி லெதிர்பெரும் பேய் தொடர்ந்ததோ
மதிகெட்டீட்ரோ வென்னமாயமோ—என்னைத்
துதியிட்ட துமக்கிது ஞாயமோ

சிரத்தினிலிருகையுஞ் சேர்த்துனக் காயிரந்
தெண்டனிட்டே னிரங்காயே—மெத்த
மிண்டுபண்ணுதடி நீயே

பரத்தையர் தமைக் கெஞ்சிச் சிரத்திற்கை குவித்தவர்
பதத்தினில் விழும் பழக்கமோ — சாமீஇ
நிதப்படிக் கிது வழக்கமோ

காசி முதற்பல யாத்திரைப் புண்ணியங்
கைவரு மிரங்கடி மானே—யிது
மெய்யுனக் காகச் சொன்னேனே

பேசிய தீர்த்தத்தின் மகிமைப் புண்ணியங்களைப்
பேதை வள்ளிக்குப் போயோதும்—உமது
சூதுப் புத்திகளிது போதும்

நெடுநேரம் நின்றிரு காலும் வலிக்குது
நெஞ்சஞ்சற் றிரங்கடி பெண்ணே — எனக்குத்
தஞ்சம் நீ தானடி கண்ணே

கொடுமுண்முளை மிதி யடிமேற் காலடி
கொண்டுவாறதைக் கண்ட பாவமோ—உமக்
கிரண்டு கால் வலிப்பதென் சாபமோ

அன்னமென்னடையே சின்ன மின்னிடையே
யாபத்துக் குதவடி கண்ணே—விரக
தாபத்தைத் தவிரடி பெண்ணே

என்ன சொன்னாலும் நீர் சொல்லும்நான் சேருவ
தில்லையென்றால் முடியாதே—யிந்த
அல்லுந்தான் போய்விடியாதோ

தலைக்கு மேலே தலை முளைத்தாற்போற் பேசுறாய்
தையல்நீ யொருத்தியோ மானே—எனக்கு
வையமெல்லா முண்டு தானே

கலக்கும் பெண்களுக் கிலக்கில்லை யென்றீர்
கணக்கென்ன சொல்லுமென் றேனே—என்னைப்
பிணக்கறப் புல்லு மென்றேனே

கதவினைத் திறந்துன் மதிமுக தெரிசனங்
காட்டியென் னுயிரைக் காப்பாயே—மையல்
வீட்டிக் கடைக்கண் பார்ப்பாயே

விதம் வித மாமறு முகங் கண்டிலேன் கண்டு
விளங்கிய தொருமுகந் தானே—யுமக்குத்
துளங்கக் காட்டுவ தென்ன நானே

மாதே மாதர்சி ரோமணியே கண்
மணியே மையல் கொண்டேண்டி—யுனக்
கணி பணிகளுந் தருவேண்டி

ஏதோ வணி பணி தாரேனென் றேதுநீர்
இங்கே தான் கொண்டுவந்தீரோ—அல்ல
தங்கேபோய்க் கொடு வருவீரோ

வேண்டிய பணியணி பூண்டிடத் தருகுவேன்
மெய்யிது கையி லிப்போதே—உனக்குத்
தையலே விரும்பிய தேதோ

ஆண்டியாயணியின் றிப் பணிசுமந்திடு முங்கள்
அப்பருக்குதை யளிப்பீரே—பூண்ட
எப்பணிகளை ஒழிப்பீரே

முத்து மூக்குத்தி கல்வைத்த பதக்கம் பொன்
மோதிரங்களுந் தருவேண்டி—தெய்வ
மாதே மனமிரங்கேன்டி

மெத்தப்படி மணி எனக்குண் டுமக்கென்ன
வேணும் நான் தருகுவேன் காணும்—சுவாமி நீர்
பூணும் பிரகாசமாய்த் தோணும்

இளையாயிரம் பொன் பெறுமிந்திர நீலப்பட்
டெழில்கொள் பீதாம்பரப் பட்டு—இங்கே
யிருக்குது தாறேன் நீ கட்டு

தழையே யுடையா யுடையாள் குறமான்
தனக்கே கொடும் நல்ல புண்ணியம்—சாமி
உமக்கே யதுபெரும் கண்ணியம்

காதணி கொண்டைக்குச் சோடில்லாக் கொடி தங்க
கைவளை கங்கணந் தாறேன்—பெண்ணே
மையலைத் தீர் நல்லவாறே

ஆதரவாய்க் குற வள்ளிக் கணிந்தவள்
அழகைப் பன்னிரு கண்ணுற் பாரும்—மனப்
புழகங்கொண் டிளமுலை சேரும்

தண்டை சிலம்பு சதங்கை சரப்பளி
தரிசொடு கடகந் தாறேண்டி—தந்தால்
மருவிடுவாயோ கூறேண்டி

ஆறு முகத்தைய ஞறெழுத்தோதவே
அடைத்ததாழ் திறக்குமப்போதே—அடி
திடத்துடன் பணிந்தனள் மாதே

மாறுபடுந் தெய்வ யானையை மணந்தையன்
வையமுய்ய வருள் செய்தார்—வானோர்
செய்ய பொன்மலர் மழை பெய்தார்

எயினர்கள் பாவையும் வியநலர் பூவையும்
இருவருமனமகிழ்வாயினர்—சுவாமிக்
கிருபுறமும் புல்லி மேயினர்

வைர மதுறுமொரு துருவனி லிருபுற
மருவியவளர்கொடி யென்னவே—பெண்க
ளிருவரும் மகிழ்வொடு துன்னவே

காதலுடன் கருதினர் தரிசித்தவர்
கவலைகள் யாவையும் நீக்கியே—துய்ய
சிவகதி நிலையை யுண்டாக்கியே

பூதலந்தனில் மாதலமிது வேயெனப்
பொருந்தும் பழநீயில் நேசம்—கொண்டு
இருந்தனரே குமரேசர்

தும்புரு நாரத ரேழிசை பாடத்
துடியிடையர மாதர் தூவப்--பல
அடியவர் கவரிகள் போட

மதிதொறும் மேகம் மும்மாரிகள் பொழியவே
மண்ணுல கெங்கணு முய்யவே--பல
புண்ணிய நெறி தலைச் செய்யவே

துதியுறும் யாகாதி கருமங்க ளோங்கத்
தூய சைவநெறி யோங்க—அரசர்
நயமாக மன்னுயிர் தாங்க

குடை கொடி யாலவட் டங்க டயங்கக்
கூரிலை வேல்கை வயங்கத்—திருமுன்
வாரணத் தோகை யிலங்க

புடைநவ வீரர்க ளரியய னிந்திரன்
போற்றிட வேற்றரிப்பீடத்—தையன்
வீற்றிருந்தார் பெண்கள் கூட

வள்ளி தெய்வயானை யுள்மகிழ்ந் தருகுறப்
புள்ளிமயின் மேலிருந்தாரே—பருளைத்
தெள்ளுதமிழ் முருகவேளே.

## வாழி விருத்தம்

அந்தணர் முதலோர் வாழி யருமறை வேள்வி வாழி
வந்தநற் பருளேத் தந்தி மாமுகர் வாழி மேன்மைப்
பந்தமார் பருளே யேசல் படிப்பவர் கேட்போர் வாழி
கந்தவே டையலோர் வேல் கவிஞெடும் வாழி வாழி

ஆனந்தா அச்சகம்,
யாழ்ப்பாணம்.